# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
# ஆத்தூர்
------
## அசல் வழக்கு எண்.39/2023

**2025 ஆம்** வருடம் மார்ச் மாதம் 18 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சின்னதுரை | ஜாதி | : | |
| க.பெ | : | சங்கப்பன் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | வளையபட்டி செட்டியபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 53/2025 |

தேதி : 18.03.2025

**1** வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கு சொத்தின் நான்குமால் எனக்கு தெரியும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரனம் 1798 1/2 சதுர அடி ஆகும். தாவா சொத்தை குருசாமி என்பவரிடமிருந்து 23.02.223 அன்று எனது மனைவி அமராவதி என்பவர் வாங்கினார். தாவா சொத்தை அமராவதி கிரையம் வாங்குவதற்கு முன்பு குருசாமி என்பவருக்கு சொந்தமாக இருந்தது. குருசாமிக்கு தாவா சொத்து அமராவதி வாங்குவதற்கு முன்பு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் கருப்பாயி என்பவரின் வாரிசு குருசாமி என்பதன் அடிப்படையில் அவருக்கு தாவா சொத்து கிடைக்கப்பெற்றது. 2015 ஆம் வருடம் முருகன் என்பவரிடமிருந்து கருப்பாயி தாவா சொத்தை கிரையம் பெற்றார். கருப்பாயின் கணவர் முத்துச்சாமி என்பவர் 2013 ஆம் வருடம் இறந்துவிட்டார். கருப்பாயி என்பவர் 2016 ஆம் வருடம் இறந்துவிட்டார். இறந்துபோன கருப்பாயி - முத்துச்சாமி ஆகியோருக்கு குழந்தைகள் இருந்தார்களா என்றால் இல்லை. கருப்பாயியின் இறுதி சடங்கை யார் செய்தார்கள் என்றால் 1வது பிரதிவாதியான குருசாமி என்பவர் செய்தார். குருசாமியின் மனைவி பெயர் வெள்ளையம்மாள் ஆகும். வெள்ளையம்மாள் என்பவர் கடந்த 2017 ஆம் வருடம் இறந்துவிட்டார். 1வது பிரதிவாதி குருசாமி என்பவர் ஆத்தூர் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.73/2019 தாக்கல் செய்து இறந்துபோன கருப்பாயி என்பவருக்கு 1வது பிரதிவாதி குருசாமி என்பவர் மட்டும் தான் வாரிசு என வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளார் என்றால் சரிதான். சரியான பிரயோஜனத்திற்காக 1வது பிரதிவாதி வாதிக்கு தாவா சொத்தை கடந்த 23.02.2023 அன்று கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். 1வது பிரதிவாதியை வயோதிகத்தின் காரணமாக தேவையில்லாமல் அழைக்க வேண்டும் என்பதற்காக அவரையும் தரப்பினராக சேர்த்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், 1வது பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால்

சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு சரியான நீதிமன்ற கட்டணம் கட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எந்த வித வழக்கு மூலமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**Sd/-Thiru.P.Jaisankar,**
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.